
தமிழ்நாட்டு எழுத்து வளர்ச்சி

EVOLUTION OF SCRIPT IN TAMIL NADU

R. Govindaraj



தமிழகத் தொல்லியல் கழகச் சிறப்பு வெளியீடு எண் 1

Tamil Nadu Archaeological Society Special Issue No. 1

1994

தமிழ்நாட்டு எழுத்து வளர்ச்சி

EVOLUTION OF SCRIPT IN TAMIL NADU

A.D. 500 - 985



R. Govindaraj

தமிழகத் தொல்லியல் கழகச் சிறப்பு வெளியீடு எண் 1

TAMIL NADU ARCHAEOLOGICAL SOCIETY SPECIAL ISSUE No. 1

1994

தமிழ்நாட்டு எழுத்து வளர்ச்சி

EVOLUTION OF SCRIPT IN TAMIL NADU

A.D. 500 – 985



R. Govindaraj

தமிழகத் தொல்லியல் கழகச் சிறப்பு வெளியீடு எண் 1

TAMIL NADU ARCHAEOLOGICAL SOCIETY SPECIAL ISSUE No. 1

1994

முதற்பதிப்பு	:	செப்டம்பர் 1994
உரிமை	:	ஆசிரியருக்கு
வெளியீட்டாளர்	:	தமிழகத் தொல்லியல் கழகம்
கிடைக்குமிடம்	:	செயலர் தமிழகத் தொல்லியல் கழகம் மே/பா கல்வெட்டியல் துறை தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர் 613 005



விலை : ரூ. 40-00

Price: Rs. 40-00

First Edition	:	September 1994
©	:	The Author
Publisher	:	Tamil Nadu Archaeological Society
Available at	:	The Secretary Tamil Nadu Archaeological Society c/o Department of Epigraphy Tamil University Thanjavur 613 005
Printed at	:	M/s Sarma's Sanatorium Press Ganeshnagar Pudukkottai 622 001 Phone : 2659

Dedicated to
my beloved father
Late Sri. K. Ramasamy

அறிமுகம்

பழந்தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்து முறைகளின் வரலாற்றைப் பற்றிய அறிவு வளர்ச்சியில் மூன்று முக்கிய காலகட்டங்களைக் குறிப்பிடலாம். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் பல ஆங்கில அறிஞர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் உச்சகட்டமாக 1858 ஐ ஒட்டி ஜேம்ஸ் பிரின்செப் என்பவர் இந்தியாவின் முதல் எழுத்து முறையான பிராமி எழுத்துக்களை முழுமையாகப் படித்துக் காட்டினார். அதற்குப்பின் 1874 இல் ஏ.சி. பர்னெல் தென்னிந்தியக் கல்வெட்டியலின் தன்மைகள் என்ற நூலையும் 1896 இல் ஜார்ஜ் பியூலர் இந்தியப் பழம் எழுத்தியல் என்ற நூலையும் வெளியிட்டனர். இந்த நேரத்தில் தென்னிந்தியக் கல்வெட்டாய்வு முறையாகத் துவக்கப்பட்டு நாட்டின் பல மூலை முடுக்குகளிலிருந்தும் கல்வெட்டுக்களின் மைப்படிகள் தொகுக்கப்பட்டு அவை படிக்கப்பட்டு வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1910-20 களில் கல்வெட்டாய்வு விறுவிறுப்பாக நிகழ்ந்தது. அந்தக் காலகட்டத்தில் கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் முதல் தலைமுறைக் கல்வெட்டாய்வாளர்களான திருவாளர்கள் வெங்கையா, கிருஷ்ணசாஸ்திரி, சுப்பிரமணிய அய்யர் ஆகியோர் தாம் கண்டுபிடித்த புதிய கல்வெட்டுக்கள் அடிப்படையில் கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் அப்போதைக்கப்போது எழுத்து வளர்ச்சி பற்றிய குறிப்புகளை வெளியிட்டதோடு தனியாகச் சில ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்டனர். இந்த வெளியீடுகள் தொடக்கக் காலகட்டத்தைச் சேர்ந்தவையானாலும் மிக முக்கிய அடிப்படை ஆய்வுகளாகும்.

இரண்டாம் காலகட்டத்தில் திரு கே.சிவராமமூர்த்தி 1952 இல் வெளியிட்ட இந்தியக் கல்வெட்டுக்களும் தென்விந்திய எழுத்துக்களும் என்ற தம் நூலில் தென்னிந்தியாவில் பரவலாகத் ஏற்பட்ட எழுத்து வளர்ச்சியைப் பல கொடிவழிப் படங்கள் (Genealogical charts) மூலம் விளக்கினார். இவ்வாய்வை மேலும் முன்னுக்குக் கொண்டு சென்றவர் திரு தி.நா.சுப்பிரமணியன் ஆவார். அவர் 1955-57 இல் தாம் பதிப்பித்த தென்னிந்தியக் கோயில் கல்வெட்டுக்கள் என்ற வரிசையில் மூன்றாம் தொகுதியில் “தென்னிந்தியக் கல்வெட்டியல்”, “தமிழ் எழுத்தியல்” என்று இரு பகுதிகளை எழுதி வெளியிட்டார். தமிழ், வட்டெழுத்து, கிரந்தம் ஆகிய எழுத்துக்களின் காலமுறை வளர்ச்சியை விளக்கும் பல எழுத்து அட்டவணைகளை “தமிழ்க் கல்வெட்டியல்” பகுதியில் சேர்த்துள்ளார். இன்றுவரை இந்நூல் ஒரு முக்கிய சுட்டு நூலாகப் பயன்பட்டு வருகிறது என்றால் மிகையாகாது.

மூன்றாம் காலகட்டம் 1960 களின் பிற்பகுதியில் துவங்கி இன்றும் தொடர்கிறது எனலாம். தமிழ்நாட்டுப் பிராமி எழுத்து வளர்ச்சியைப் பற்றிய ஆய்வு விறுவிறுப்படைந்தது இக்கட்டத்தில்தான். திரு. ஐ .மகாதேவன் இவ்வாய்வைத் தொடங்கி வைத்ததோடு பல அரிய முடிவுகளைக் கண்டு வெளியிட்டார். இவ்வாய்வில் பங்கேற்ற பேரா. டிவி .மகாலிங்கம், திருவாளர்கள் இரா. நாகசாமி, கே.ஜி. கிருஷ்ணன், பன்னீர் செல்வம், மயிலை சீனி வேங்கடசாமி,

நடன காசிநாதன் ஆகியோர் சில நூல்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டனர். இவ்வாய்வுகளின் கூட்டு விளைவாக இப்போது பிராமி எழுத்து முறை பற்றிய அறிவு ஓரளவு தெளிவாகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகளின் தொடர்ச்சியாக திரு. கோவிந்தராஜ் ஆக்கியுள்ள இந்தச் சிறிய ஆனால் வலுவான நூல் பிராமி நிலையின் இறுதிக் கட்டத்திலிருந்து அதாவது சுமார் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் வழங்கிய முக்கிய இரு எழுத்து முறைகளான வட்டெழுத்து, தமிழ் ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியை விளக்குகிறது.

திரு.கோவிந்தராஜ் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறையில் 1987–90 இல் ஆய்வு மாணவராக இருந்த போது உருவாக்கிய ஆய்வுக் கட்டுரையே இந்நூல். பெருமுயற்சி செய்து பல கல்வெட்டுக்களின் மைப்படிகளையும் ஒளிப்படங்களையும் பயன்படுத்தி மிகத் துல்லியமாக எழுத்துக்களின் வளர்ச்சிப் படிகளைக் காலமுறைப்படுத்தித் திரட்டி, வரைந்து, அட்டவணைகளாகக் கொடுத்துள்ளார். புதிய கல்வெட்டுக்களுக்குக் காலங்கணிக்க இவ்வட்டவணைகள் மிகவும் பயன்படும். வட்டெழுத்து முறையே தமிழ்நாட்டில் முதலில் பிராமியிலிருந்து முகிழ்த்தது என்ற முடிவை இந்நூல் வலியுறுத்தியுள்ளது. மேலும் வட்டெழுத்து முறைக்கும் தமிழ் எழுத்து முறைக்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

திரு. கோவிந்தராஜ் கொடுத்துள்ள சில முடிவுகள் பற்றி கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும். இருப்பினும் இந்த நூல் தமிழ் மற்றும் வட்டெழுத்து முறைகளின் ஆய்வின் நான்காம் கட்டத்துக்கு அடித்தளம் இட்டுள்ளது என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இந்த நூலைத் தம் சொந்தப் பொறுப்பில் வெளியிடத் தக்க ஏற்பாடுகளைச் செய்த திரு. கோவிந்தராஜ் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகுக. அவர் ஆய்வைத் தம் வெளியீடாக வெளியிடும் தமிழகத் தொல்லியல் கழகத்தினை நான் பாராட்டி மகிழ்கிறேன்.

கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005
17.8.94

எ. சுப்பராயலு

ACKNOWLEDGEMENTS

The present book is the outcome of the research project I had done in the Department of Epigraphy, Tamil University, Thanjavur - 613 005 availing of a fellowship awarded by the Institute of Archaeology, Archaeological Survey of India, New Delhi. I wish to convey my sincere thanks to the authorities of the Institute of Archaeology for providing me the fellowship. I wish to express my gratitude to the Vice-Chancellor and the Syndicate of the Tamil University for having permitted me to carry on this work in the University. I also thank for the nice support extended by the Registrar and the administrative staff, Tamil University.

I am thankful to Professor Y. Subbarayalu, Head, Department of Epigraphy, Tamil University, for suggesting the topic for the project and the guidance in the course of the work. I am grateful to Dr.K. Rajan for his assistance at the time of preparation and also for his valuable service rendered in the press. I owe a lot to Mr. P. Jayakumar for the help provided in the proof correction.

I am under great obligation to my brother Dr. R. Arunagiri, Ph.D., Laboratory Director, Computer Diagnostics, Thanjavur and Dr. Ambujam Arunagiri, M.S., Assistant Professor of Surgery, Thanjavur Medical College, Thanjavur, for their affection and encouragement all through this project.

I am also grateful to Dr.C.K.Sivaprakasam, Professor, Department of History, A.V.V.M. Sri Pushpam College, Poondi, Pulavar S. Raju, Associate Professor and Dr. A. Krishnan, Senior Lecturer, Department of Epigraphy and Mr. P. Sadasivam, Programmer, Department of Computer Science, Tamil University, Dr.D.Dayalan, Deputy Superintending Archaeologist, Archaeological Survey of India, Bhopal and Mr.S.Rajavelu, Assistant Epigraphist, The Office of the Director of Epigraphy, Archaeological Survey of India, Madras Circle, for their valuable suggestions and assistance during the course of this work. My sincere thanks are due to the technical staff of Epigraphy Department Mr. M. Selvaraj and Mr. N. Chandrasekaran.

I also thank M/s. Sarma's Sanatorium Press, Pudukkottai for the neat production of this work.

ABBREVIATIONS

ARE	—	Annual Report on Epigraphy
EI	—	Epigraphia Indica
SII	—	South Indian Inscriptions
SITI	—	South Indian Temple Inscriptions
TASSI	—	Transactions of the Archaeological Society of South India
TSA	—	Tamil Nadu State Department of Archaeology

METHOD OF TRANSLITERATION

Vowels

ஆ	ā
ஈ	ī
ஊ	ū
ஏ	ē
ஓ	ō
ஐ	ai
ஔ	au

Consonants

க்	k/g
ங்	ṅ
ச்	c/ch/s
ஞ்	ñ
ட்	ṭ/ḍ
ண்	ṇ
ழ்	ḻ
ள்	ḷ
ற்	ṟ
ன்	ṉ

பொருளடக்கம்

CONTENTS

தமிழ்நாட்டு எழுத்து முறைகளின் வளர்ச்சி

(கி.பி. 500-985)

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களில் பிராமிக்குப்பின் வட்டெழுத்து, தமிழ், கிரந்த எழுத்துக்களின் வரிவடிவங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இதில் வட்டெழுத்து வரிவடிவமும், தமிழ் எழுத்து வரிவடிவமும் தமிழ் மொழியை எழுதவும், கிரந்த எழுத்து வரிவடிவம் சமஸ்கிருத மொழியை எழுதவும் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் கி.பி ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பாக பிராமிக் கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.[1] இதன் தொடக்க காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு எனலாம். இவைகள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலேயே மிகுதியாகக் கிடைத்துள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கு உட்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் எவ்வித வரிவடிவ வளர்ச்சியையும் குறிப்பிடத்தக்க அளவில் பெறவில்லை. ஆயினும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பின் கிடைக்கப்பெறும் கல்வெட்டுக்கள் வட்டெழுத்து, கிரந்தம் மற்றும் தமிழ் என வரிவடிவம் பெற்று வளர்ந்து வந்துள்ளன. வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் ஆகிய வரிவடிவங்களில் வட்டெழுத்து வரிவடிவத்தின் வளர்ச்சியை மட்டுமே தொடர்ச்சியாகக் காணமுடிகின்றது. மற்ற இரு வரிவடிவங்களை கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்பே காணமுடிகின்றது.

மேற்கண்ட காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்கள், செப்பேடுகள் அனைத்தும் கோயில் கட்டுமானம், அதன் கொடை பற்றியே பெரும்பாலும் கூறுகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் ஒன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் நிரை கவர்தல், தொறுப்பூசல் போன்றவற்றையே பெரிதும் காட்டுகிறது. இக் கல்வெட்டுக்கள் எபிகிராபியா இண்டிகா (Epigraphia Indica), தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுப்பு (South Indian Inscriptions), கல்வெட்டு ஆண்டறிக்கை (Annual Report on Epigraphy) போன்ற தொகுதிகளில் வெளியிடப்பட்டுள்ளன. இவைகளே இவ்வாய்வில் எழுத்து முறைகளின் வளர்ச்சியைப் பற்றி அறிய பயன்படுத்தப்பட்டுள்ள முதன்மைச் சான்றுகளாகும்.

ஜி. பியூலர் *(1896)*[2] மற்றும் ஜி.எச். ஓஜா *(1918)*[3] போன்றோரே இந்திய எழுத்து வரிவடிவ வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சியின் முன்னோடிகளாவர். இவர்களுக்குப் பிறகு இவ்வாராய்ச்சியில் புதிய அணுகுமுறையை ஏ.எச். தானி *(1963)*[4] கையாண்டுள்ளார். மேலும், மேற்கண்ட ஆய்வாளர்களின் ஆய்வு பெரும்பாலும் இந்திய எழுத்து வரிவடிவங்களைப் பற்றியே அமைந்தன. இருப்பினும் அவ்வாய்வில் தென்னிந்திய எழுத்து முறைகளின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது.

ஏ.சி. பர்னல் (1874)[5], டி.ஏ. கோபிநாதராவ் (1910)[6], டி.என். சுப்ரமணியம் (1957)[7], சி.சிவராமமூர்த்தி (1966),[8] டி.வி.மகாலிங்கம் (1967)[9] போன்றோர் தென்னிந்திய எழுத்துக்களின் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பாக தமிழ் நாட்டு எழுத்து வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்தனர். அண்மைக் காலமாக கே.ஜி.கிருஷ்ணன்[10], ஐராவதம் மகாதேவன் [11] மற்றும் பல அறிஞர்கள்[12] மிகுந்த ஈடுபாட்டுடன் ஆய்வு செய்து இது தொடர்பாக பல சிறந்த கட்டுரைகளை வெளிக் கொணர்ந்தனர்.

கடந்த இருபது ஆண்டுகளில் பூலாங்குறிச்சி கல்வெட்டு[13] (தேவர் திருமகனார் மாவட்டம்) மற்றும் தருமபுரி,[14] வடஆர்க்காடு[15] மாவட்டங்களில் புதிய நடுகற் கல்வெட்டுக்கள் ஏராளமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்கள் பிராமி கல்வெட்டுக்களுக்கும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கிடைக்கக் கூடிய கல்வெட்டுக்களுக்கும் உள்ள கால இடைவெளியை இணைக்க உதவுகிறது. மேலும், அறச்சலூர், திருநாதர்குன்று மற்றும் நாள் குறிக்கப் பெறாத சில கல்வெட்டுக்களை ஒரு கால வரையறைக்குள் கொண்டுவரத் துணைபுரிகின்றன. இதனால் எழுத்து முறைகளின் மாற்றநிலை மற்றும் வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் எழுத்து வரிவடிவங்களிடையே ஏற்பட்ட தாக்கம் மற்றும் அவைகளின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ள உதவி புரிகின்றன. இவ்வாய்வு கி.பி. 500 முதல் கி.பி. 985 முடிய உள்ள காலகட்டத்திற்கு உட்பட்ட எழுத்து வளர்ச்சியைப் பற்றி அறிய பல்வேறுபட்ட வரைபடங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும்.

தற்பொழுது பரவலாகக் கிடைக்கும் அனைத்துக் கல்வெட்டுக்களின் காலம், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் டி.வி. மகாலிங்கம் உருவாக்கிய A Topographical List of Inscriptions in Tamil Nadu and Kerala States என்ற தொகுப்பினைக் கொண்டு ஆய்வு செய்யப்படுகிறது.[17] இவ் ஆய்வில் கணிப்பொறி உபயோகப் படுத்தப்பட்டு சான்றுகள் ஒருங்கமைப்பு செய்யப்பட்டன. கீழ்க்கண்ட அட்டவணை 1ல் தமிழகத்தில் கி.பி. 985 வரை கிடைத்த கல்வெட்டுக்கள் கால வரிசையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 1

காலம்	வட்டெழுத்து	தமிழ்	கிரந்தம்
500-600	25	—	2
601-700	54	8	40
701-800	49	41	30
801-985	236	1762	52

கி.பி எட்டாம் நூற்றாண்டு வரை வட்டெழுத்துக் கல்வெட்டுக்களே மிகுதியாகக் கிடைத்துள்ளதை மேற்கண்ட அட்டவணையில் இருந்து அறிய முடிகிறது. மேலும், கி.பி. 600 வரை தமிழ் வரிவடிவக் கல்வெட்டுக்கள் எதுவும் கிடைக்கவில்லை. கிரந்தக் கல்வெட்டுக்கள் இரண்டு மட்டுமே கிடைத்துள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஒரு சில தமிழ்க் கல்வெட்டுக்கள் கிடைத்த போதிலும், கிரந்தக் கல்வெட்டுக்களே (பெரும் பாலும் துண்டுக் கல்வெட்டுக்கள்) அதிகமாகக் கிடைத்துள்ளன. கி.பி. எட்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்பும் தமிழ்க் கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்க அளவு கிடைக்கின்றன. அட்டவணை 2 ல் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுக்கள் (மாவட்ட வாரியாக) வட்டாரங்களின் அடிப்படையில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை - 2

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள்

	500 – 600				601 - 700			701 - 800			801 - 985		
மாவட்டம்	பி	வ	த	கி	வ	த	கி	வ	த	கி	வ	த	கி
திருச்சிராப்பள்ளி	4	—	—	1	—	4	7	—	2	1	—	338	3
தஞ்சாவூர்	—	—	—	—	—	—	—	—	5	1	—	607	4
செங்கல்பட்டு	—	—	—	—	—	4	24	—	13	10	—	256	12
தருமபுரி	—	21	—	—	16	—	—	23	1	—	18	5	2
வடஆர்க்காடு	1	3	—	1	34	—	3	12	12	3	2	259	16
தென்ஆர்க்காடு	—	—	—	—	—	—	6	—	6	2	1	251	2
சேலம்	—	—	—	—	—	—	—	—	—	9	—	17	—
கோயம்புத்தூர்	3	—	—	—	—	—	—	—	—	—	4	4	—
மதுரை	24	—	—	—	—	—	—	4	1	4	22	3	5
திருநெல்வேலி	1	—	—	—	3	—	—	7	—	—	146	18	1
இராமநாதபுரம்	1	1	—	—	1	—	—	1	—	—	19	1	3
கன்னியாகுமரி	—	—	—	—	—	—	—	2	1		24	3	4
மொத்தம்	34	25	—	2	54	8	40	49	41	30	236	1762	52

பி — தமிழ்–பிராமி
த — தமிழ்
வ — வட்டெழுத்து
கி — கிரந்தம்

வரிவடிவங்களின் வளர்ச்சியில் சமூகப் பண்பாடு, நில அமைப்பின் தாக்கம்

இந்தியாவில் இதுவரை கிடைத்துள்ள பழமையான வரிவடிவமும், இன்றைய இந்திய எழுத்துக்களின் பிறப்பிடமாகவும் விளங்கும் பிராமி எழுத்தின் தோற்றத்தைப் பற்றி அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகிறது. வட்டெழுத்து, தமிழ், கிரந்த வரிவடிவங்களும் பிராமி வரிவடிவத்திலிருந்தே தோன்றியுள்ளன என்பது தெளிவு. ஆயினும், வடஇந்திய பிராமி எழுத்திற்கும், தமிழ்நாட்டில் கிடைக்கும் பிராமி எழுத்திற்கும் வேறுபாடுகள் உள்ளன. வடஇந்திய பிராமியில் காணப்படும் வர்க்க எழுத்துக்கள் தமிழ்-பிராமியில் காணப்படவில்லை.[17] ஆயினும் தமிழ்-பிராமியில் ழ, ள, ற, ன போன்ற சிறப்பு எழுத்துக்களும் எகர, ஒகரக் குறில்களும் காணப்படுகின்றன.

வட்டெழுத்தின் தோற்றத்தைப் பற்றி அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. அவைகள் முறையே:

1. தனிப்பட்ட வளர்ச்சி[18]
2. வளைவு வரிவடிவம் கொண்ட தமிழ் எழுத்து [19]
3. தமிழ் - பிராமியிலிருந்து தோன்றியமை[20]

தற்பொழுது கிடைத்துள்ள சில முக்கிய வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் வாயிலாக வட்டெழுத்து பிராமியிலிருந்தே உருவாகியுள்ளன என்பதை அறியமுடிகின்றது. சில அரிதான கண்டுபிடிப்புகளாகிய அறச்சலூர் (கி.பி. நான்காம் நூற்றாண்டு)[21], பூலாங்குறிச்சி (கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு),[22]. இருளப்பட்டி (கி.பி. 500 -550) [23] கல்வெட்டுக்களும் மற்றும் தருமபுரி, வடஆர்க்காடு மாவட்டங்களில் கிடைத்த நடுகற் கல்வெட்டுக்களும் வட்டெழுத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் உறுதிபடுத்தப் பெரிதும் உதவுகின்றன (படம் 1 - 10 மற்றும் 26 - 36).

தமிழ் எழுத்துக்களைக் கொண்ட பல்லவ மன்னன் சிம்மவர்மனின் (கி.பி. 550) பள்ளன்கோயில் செப்பேடே இதுவரை கிடைத்த சான்றுகளில் காலத்தால் முதன்மை யானதாகும்.[24] இதற்குப்பின் தமிழ் எழுத்து வரிவடிவம் வல்லம் (கி.பி. 610 - 630),[25] திருக்கழுக்குன்றம் (கி.பி. 650)[26] கல்வெட்டுக்கள் மற்றும் கூரம் (கி.பி. 689 - 691)[27] செப்பேடுகளில் காணக்கிடைக்கின்றன. இவற்றில் பள்ளன்கோயில் செப்பேட்டில் காணப்படும் எழுத்துக்கள் மற்ற மூன்று இடங்களில் காணப்படும் எழுத்துக்களை விட வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ளது. கி.பி. 550 வரை கிடைத்துள்ள வட்டெழுத்துக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இச்செப்பேட்டில் காணப்படும்

தமிழ் எழுத்துக்கள் நன்கு வளர்ந்த நிலையில் உள்ளன. இது அப்போது தமிழ் எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுக்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. ஆனால் உண்மையில் கி.பி. 600 வரை வேறு தமிழ் வரிவடிவக் கல்வெட்டுக்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. எழுத்தமைதியின் அடிப்படையில் பார்க்கும் போது பள்ளன்கோயில் செப்பேடும் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பட்டத்தாள்மங்கலம் செப்பேடும் வரிவடிவில் ஒத்திருப்பதால் பள்ளன்கோயில் செப்பேட்டின் காலத்தை கி.பி. எட்டாம் நூற்றாண்டு எனலாம். மேலும் கூரம் செப்பேட்டில் உள்ள உயிர்மெய் எழுத்துக்களில் வரும் ஆ, ஏ, ஓ போன்ற உயிர்க்குறிகளைக் குறிக்கும் குறியீடுகள் சேர்த்தே எழுதப்பட்டுள்ளன. பள்ளன்கோயில் செப்பேடுகளில் இக்குறியீடுகள் தனியாக எழுதப்பட்டுள்ளன. இச்செப்பேடுகளில் காணப்படும் ண, வ, ன போன்ற எழுத்துக்கள் கூரம் செப்பேட்டிலுள்ளதைக் காட்டிலும் வளர்ந்த நிலையில் உள்ளன.

தமிழகத்தில் காணப்படும் கிரந்தக் கல்வெட்டுக்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே காணப்படுகின்றன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி. 610 - 630) காலத்திலிருந்து இக்கல்வெட்டுக்கள் கிடைப்பதால் இதைப் பல்லவர்கள் தமிழ்நாட்டின் வடபகுதியில் முதலில் அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். மேலும், இப்பகுதியிலேயே பழமையான தமிழ், வட்டெழுத்து, கிரந்த வரிவடிவங்களும் காணப்படுவதைக் குறிப்பிட வேண்டும். ஒரே காலகட்டத்தில் ஒரே நிலப்பகுதியில் தமிழ் மொழிக்கு தமிழ் மற்றும் வட்டெழுத்து வரிவடிவமும் சமஸ்கிருத மொழிக்கு கிரந்த வரிவடிவமும் உபயோகப்படுத்தப்பட்டதற்கும் அவைகள் வெவ்வேறு காலகட்டத்தில் பல்வேறு இடங்களில் தோன்றியதற்கும் அங்கு நிலவிய பல்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகளின் தாக்கம் முக்கியக் காரணமாக இருக்கலாம்.

தருமபுரி, வடஆர்க்காடு மாவட்டங்களில் காணப்படும் மிகுதியான வட்டெழுத்து நடுகற்கள் தொறுப்பூசலில் ஈடுபட்டு உயிர்நீத்த வீரர்களுக்காக எழுப்பப்பட்டவை. இந் நடுகற்களில் காணப்படும் எழுத்துக்கள் எளிமையானதும் தொன்மையானதுமாக விளங்குகின்றன (படம் 22-28). ஆனால் கி.பி. 700 வரை செங்கற்பட்டுப் பகுதியில் கிடைத்த நான்கு தமிழ் எழுத்து கல்வெட்டுக்களில் மூன்று கோயில் எழுப்பியதையும், மற்றொன்று கோயிலுக்குத் தானம் வழங்கியதையும் குறிப்பிடுகின்றன. திருச்சிராப்பள்ளிப் பகுதியில் கிடைக்கும் மற்ற நான்கு கல்வெட்டுக்கள் ஆட்பெயரைக் கொண்டு விளங்குகின்ற சிறிய கல்வெட்டுக்களாகும். இத்தகைய சிறிய கல்வெட்டுக்கள் பின்வரும் நூற்றாண்டுகளில் தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன (படம் 37, 38).

கி.பி. 700 வரை கிரந்தக் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. கிரந்தக் கல்வெட்டுக்களுடன் ஒப்புநோக்கும்போது தாய்மொழியை எழுதப்

பயன்படுத்தப்பட்ட தமிழ் எழுத்துக் கல்வெட்டுக்கள் ஐந்தில் ஒரு பங்கே கிடைக்கின்றன (அட்டவணை 2). எனவே தமிழ் வரிவடிவம் கொண்ட கல்வெட்டுக்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே தோன்றின எனலாம். மேற்கூறிய தமிழ் மற்றும் கிரந்த வரிவடிவக் கல்வெட்டுக்கள் பல்லவர் ஆட்சிப் பகுதியில் கிடைப்பதனால் பல்லவர்களே இவ்விரு எழுத்து வரிவடிவங்களையும் போற்றி வளர்த்தனர் எனக் கருதலாம்.

கி.பி. 6 - 7 ஆம் நூற்றாண்டுகளில் கிடைத்த வட்டெழுத்து (படம் 27 - 36), தமிழ் (படம் 37 - 51) வரிவடிவக் கல்வெட்டுக்களில் காணப்படும் உயிர்மெய் எழுத்துக்களாகிய க, ங, ச, ஞ, ட, ய, ர, ல, ழ, ள, ன, ற ஆகியவற்றின் வரிவடிவங்கள் ஏறக்குறைய ஒன்று போலவே உள்ளன. ஆனால் உயிர்மெய் எழுத்துக்களில் வரும் உயிர்க்குறிகளைக் குறிக்கும் வடிவங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. தமிழ் எழுத்துக்களாகிய ங, ஞ, ட, ண, த, ப, ய, வ ஆகியவை கிரந்த எழுத்தின் வரிவடிவத்தை ஒத்துள்ளன. இதில் க, ச, ர எழுத்துக்களின் வரிவடிவத்தினிடையே சிறிது வேறுபாடு காணப்படுகிறது (படம் 56 - 59). கிரந்தக் கல்வெட்டுக்களில் க, ர எழுத்துக்களில் காணப்படும் குத்துக்கோடு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. கிரந்தத்திலும் தமிழிலும் உயிர்மெய் எழுத்துக்களில் வரும் உயிர்க்குறியைக் குறிக்கும் வரிவடிவங்கள் ஒன்று போலவே உள்ளன. ஆயினும் இதைக் கொண்டு கிரந்தத்திலிருந்துதான் தமிழ் எழுத்து தோன்றியது என்று கூறமுடியாது. ஏனெனில் தமிழ் மொழிக்குரிய ழ, ள, ற, ன முதலியவை கிரந்தத்தில் காணப்படவில்லை. வட்டெழுத்து, கிரந்தம், தமிழ் எழுத்துக்களின் வரிவடிவங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளைக் கொண்டு பார்க்கும் பொழுது கிரந்த எழுத்துக்கள் ஏற்கனவே உபயோகத்தில் உள்ள தாய்மொழி வரிவடிவமான வட்டெழுத்துக்களின் மேல் கொண்ட தாக்கத்தினால் ஏழாம் நூற்றாண்டில் தமிழ் எழுத்து உருவாகியிருக்க வேண்டும் எனலாம். தொடக்க காலத் தமிழ் கல்வெட்டுக்களின் எழுத்து வடிவங்களைக் கூர்ந்து நோக்கும் பொழுது இது புலனாகிறது. வட்டெழுத்தும் தமிழ் எழுத்தும் படங்கள் 19, 20, 21 இல் ஒப்பு நோக்கப்பட்டுள்ளது. வல்லம் கல்வெட்டில் (படம் 37) காணப்படும் ம, வ ஆகியவையும், திருக்கழுக்குன்றம் (படம் 38) கல்வெட்டில் காணப்படும் ம மற்றும் மலையடிக்குறிச்சிக் (படம் 29) கல்வெட்டுக்களில் காணப்படும் ச, ப, ம, ர, வ எழுத்துக்கள் வட்டெழுத்தின் தன்மையைக் கொண்டுள்ளன. இவை கிரந்தம் வட்டெழுத்தின் மேல் கொண்ட செல்வாக்கைக் காட்டுகிறது. இது மேற்கூறிய கருத்தை உறுதி செய்வதாக அமைவதால் இதையே தமிழ் எழுத்துக்களின் ஆரம்ப நிலையாகக் கருதலாம்.

பாண்டி மண்டலத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பரவ ஆரம்பித்தன. ஆனால் பல்லவர்களுடைய ஆதரவினால் அந்த காலகட்டத்தில் தமிழ் வரிவடிவக் கல்வெட்டுக்கள் தொண்டை மண்டலத்தில் பெருக

ஆரம்பித்தன. கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டில் தமிழ் வரிவடிவக் கல்வெட்டுக்கள் சோழ மண்டலத்திலும், தொண்டை மண்டலத்திலும் விரைவாகப் பல்கிப் பெருகின (அட்டவணை 2). பல்லவர்களுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த சோழர்கள் கோயில் கட்டுவதையும், கொடை அளிப்பதையும் பெரிதும் ஊக்குவித்தனர். ஆயிரக் கணக்கில் கல்வெட்டுக்கள் இப்பகுதியில் உருவாக இவை வகை செய்தன. ஆனால் இதே காலகட்டத்தில் பாண்டி நாட்டில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களே உபயோகத்தில் இருந்தன. நன்கு வளர்ச்சியுற்ற வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் இப்பகுதியிலேயே கிடைக்கின்றன. தமிழ்நாட்டுப் பிராமி கல்வெட்டுக்கள் (26 கல்வெட்டுக்கள்) பாண்டி நாட்டில் (மதுரை 24, திருநெல்வேலி 1, இராமநாதபுரம் 1) அதிகமாகக் கிடைத்த போதிலும் வட்டெழுத்துக்கும் பிராமிக்குமிடையே உள்ள தொடர்புக்கான சான்றுகள் கிடைக்காமை ஏன் ? என்ற வினா எழுகிறது.[28] அதற்குக் காரணம் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் வடஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் காணப்படும் நடுகற்களிலேயேக் காணக் கிடைக்கின்றன. அக்கால கட்டத்தில் பாண்டி நாட்டில், தமிழகத்தின் வடபகுதியில் பெரும்பாலும் பயன்படுத்திய பெருங்கற்படைப் பண்பாட்டுச் சின்னத்தின் வழிவந்த நடுகற்களை நடும் வழக்கத்தைப் போல் அல்லாமல் முதுமக்கள் தாழியை உபயோகப்படுத்தியதே ஆகும். எனவே பாண்டி நாட்டில் அக்கால நடுகற்கள் இல்லாமையால் அக்காலத்திற்குரிய வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கிடைக்கவில்லை. இது பிராமி நிலைக்கும் வட்டெழுத்து நிலைக்கும் இடையே இடைவெளி ஏற்பட முக்கியக் காரணமாக இருந்தன எனக்கருதலாம்.

வட்டெழுத்து, தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி

வட்டெழுத்து, தமிழ் எழுத்து வரிவடிவங்களின் வளர்ச்சியை அறிந்துகொள்ள எழுத்துக்களைத் தனித்தனியே கால வரிசையில் ஆய்வது அவசியம். இதற்காக கி.பி. 500 க்கும் 985 க்கும் இடையிலான ஒன்பது வட்டெழுத்து, தமிழ் கல்வெட்டுக்கள் ஏறக்குறைய சரியான கால இடைவெளி கொண்டு தேர்வு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வட்டெழுத்தின் வளர்ச்சி

வட்டெழுத்தின் வளர்ச்சியை கீழ்க்கண்ட தேர்வு செய்யப்பட்ட கல்வெட்டுக் களிலிருந்து உருவாக்கப்பட்ட வரைபடங்கள் மூலம் அறியலாம் (படம் 1 - 10).

வ.எண் 1 : பூலாங்குறிச்சிக் கல்வெட்டு (தேவர் திருமகனார் மாவட்டம்)- கி.பி. 500.

வ.எண் 2 : இருளப்பட்டி (தருமபுரி மாவட்டம்), நடுகல் கல்வெட்டுக்கள் - கி.பி. 500 - 550 (EI 39 : 32).

வ.எண் 3 : சிம்மவர்மனின் தொண்டனூர் (வடஆர்க்காடு மாவட்டம்) நடுகல் கல்வெட்டு - கி.பி. 550 - 570 (TSA 172/71).

வ.எண் 4 : திருநாதர்குன்று (தென்ஆர்க்காடு மாவட்டம்) கல்வெட்டு - கி.பி. 600 (SII 14 : 262).

வ.எண் 5 : முதலாம் நரசிம்மவர்மனின் சாத்தனூர் (வடஆர்க்காடு மாவட்டம்) நடுகல் கல்வெட்டு - கி.பி. 630 - 668 (TSA 36/71).

வ.எண் 6 : பாண்டியன் சேந்தனின் மதுரை கல்வெட்டு - கி.பி. 700 (EI 38 : 4)

வ.எண் 7 : நெடுஞ்சடையனின் வேள்விக்குடிச் செப்பேடு - கி.பி. 770 (EI 17 : 16). இதுவரைக் கிடைத்த வட்டெழுத்துச் செப்பேடுகளில் இதுதான் பழமையானது ஆகும்.

வ.எண் 8 : வரகுண பாண்டியனின் அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு - கி.பி. 866 (EI 9 : 10).

வ.எண் 9 : சோழன்தலைகொண்ட வீரபாண்டியனின் அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி மாவட்டம்) கல்வெட்டு - கி.பி. 966 (EI 25 : 6).

வட்டெழுத்துக்களின் வளர்ச்சியில் சிலமுக்கியக் கூறுகள்

மேற்கண்ட சில கல்வெட்டுக்களில் மெய்யெழுத்துக்கள் புள்ளியுடன் காணப்படுகின்றன. அதே போன்று பூலாங்குறிச்சி, மதுரைக் கல்வெட்டுக்களிலும் மற்றும் வேள்விக்குடிச் செப்பேட்டிலும் எகர, ஒகர குறில்களுக்கான உயிர்மெய் எழுத்துக்களைக் குறிக்கவும் புள்ளி இடப்பட்டுள்ளது. நேர்கோடுகளால் மட்டுமே எழுதப்பட்ட எழுத்துக்கள் வளைந்த வடிவம் பெற ஆரம்பித்தன. தமிழ் எழுத்து வரிவடிவம்போல் அல்லாது வட்டெழுத்தில் உயிர்மெய் எழுத்துக்களில் வரும் உயிர்க்குறிகளைக் குறிக்க ஓரே கோட்டால் எழுத்துடன் சேர்த்தே எழுதப்பட்டுள்ளதை ஆரம்ப காலத்திலிருந்தே காணலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின் வட்டெழுத்துக்கள் மேலும் சாய்ந்த நிலையையும் சுழித்து எழுதப்படும் வடிவமும் பெற ஆரம்பித்தன. எழுத்துக்கள் இடச்சுற்று முறையில் எழுதப்பட்டன. மேற்காணும் தன்மைகள் வேள்விக்குடிச் செப்பேடுகளால் உறுதி செய்யப்படுகின்றன. தொடக்கத்தில் உயிர்க்குறில் மற்றும் நெடில் ஆகிய ஆ, இ, ஈ, ஓ, ஓ, ஆகியவற்றின் குறியீடுகள் எழுத்துக்களின் மேல் பகுதியில் குறிக்கப்பட்டன. கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின் இக்குறியீடுகள் எழுத்தின் வலப்பக்கத்தின் நடுப்பகுதியில் வளைத்து இடப்பட்டன. ட எழுத்தில் காணப்படும் கீழ்நோக்கிய கோடு மெதுவாக மேல்நோக்கி வளர்ந்து ப போன்ற வடிவைப் பெற்றது. ம எழுத்தின் வலப்புறத்திலுள்ள படுக்கைக்கோடு சுழித்து இடப்பட்டது. ப, ம, வ எழுத்தின் இடப்பக்கக் கோட்டின் மேல்பாகம் இடப்புறத்தில் கீழ்நோக்கி சிறிது வளைந்துள்ளது. த எழுத்து வளைந்து இரு குவித்தன்மை கொண்ட வடிவமாக மாறின. ந எழுத்து இருவளைவு பெற்று மேல் நிலையில் குவித்தன்மையும் கீழ்நிலையில் குழித்தன்மையும் பெற்றது. வட்டெழுத்துக்கள் இடப்பக்கமாக சுழித்து எழுதப்பட்டதின் விளைவாக சாய்ந்த நிலையையும் வட்ட வடிவத் தன்மையையும் பெற்றது.

தமிழ் எழுத்தின் வளர்ச்சி

தமிழ் எழுத்தின் வளர்ச்சியை அறிவதற்குக் கீழ்க்கண்ட கல்வெட்டுக்களின் மூலம் உருவாக்கப்பட்ட வரைபடங்கள் (*11-18*) துணைபுரிகின்றன.

வ.எண் *1&2*: வல்லம் (SII *2:72*), திருக்கழுக்குன்றம் (SITI, III, pt.II, ப. *1560*) கல்வெட்டுக்கள் கி.பி. *7* ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்ததாகும். மேலும் இவை பிராமிக்குப் பின் கிடைத்த தமிழ் கல்வெட்டுக்கள்.

வ.எண் *3* : பரமேஸ்வரவர்மனின் கூரம் செப்பேடு - கி.பி. *669-691* (SII *1 : 151*). இதுவரை கிடைத்த தொன்மையான தமிழ் வரிவடிவம் கொண்டச் செப்பேடு இதுவே ஆகும்.

வ.எண் 4 : சிம்மவர்மனின் (கி.பி. 550) பள்ளன்கோயில் செப்பேடு.
இச்செப்பேடு கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைச் சார்ந்தது என்றாலும் முன்பே கூறியது போல் கிரந்த, தமிழ் எழுத்தமைதியின் அடிப்படையில் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் எழுதப்பட்டது (TASSI,1958-59, T.N. Subramaniam, "Pallankoil Jaina Copper Plates of the Pallavas").

வ.எண் 5 : நந்திவிக்கிரம வர்மனின் (கி.பி. 792) பட்டத்தாள்மங்கலம் செப்பேடு (EI 18 : 14).

வ.எண் 6 : திருப்பூந்துருத்தி கல்வெட்டு, தஞ்சாவூர் மாவட்டம் - கி.பி. 853 (SII 19 : 74).

வ.எண் 7 : திருவொற்றியூர் கல்வெட்டு, செங்கல்பட்டு மாவட்டம் - கி.பி. 887 (SII 12 : 70).

வ.எண் 8 : உத்தமச் சோழனின் (கி.பி. 986) சென்னை அருங்காட்சியகச் செப்பேடு (SII 3 : 128).

வ.எண் 9 : முதலாம் இராசராசனின் லெய்டன் செப்பேடு - கி.பி. 1006 (EI 22 : 34).

மேற்கண்ட செப்பேடு, கல்வெட்டுக்களிலிருந்து குறிப்பிட்ட நானூறு ஆண்டு கால தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சியை வரைபடங்களில் காணலாம். மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் வழக்கத்தை வரிசை எண் 1, 3, 4, 5 ன் மூலம் காணலாம். மேலும், இவை அரசு ஆணை தாங்கிய சாசனமாக இருந்தும் புள்ளியில்லா மெய்யெழுத்துக்கள் சிலவற்றையும் கொண்டிருப்பதைக் காணலாம். பிற்காலக் கல்வெட்டுக்களில் புள்ளியிடும் வழக்கம் முழுவதுமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. அரசு ஆணைகள் முதலில் பனைஓலையில் எழுதப்பட்டுப் பின்னர் இவை அழியாவண்ணம் நிலைபெற்றிருக்க கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் பதிவு செய்யப்படுகிறது. ஓலைகளில் புள்ளியிடும் பொழுது அவை பழுதடைந்து விடுவதால் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடாமல் எழுதுவது வழக்கம். அவை கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் உண்மைப் படிவமாக செதுக்கும் பொழுது அவ்வாறே அவற்றை எழுதியிருக்கலாம் எனக் கருதலாம்.

தொடக்க காலத்தில் உயிர்மெய் எழுத்துக்களுடன் உயிர்க்குறில்கள் எவ்வித இடைவெளியுமின்றி சேர்த்தெழுதப்பட்டன. கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்தே இவை பிரித்தெழுதப்பட்டன. உயிர்மெய் எழுத்தின் இகரக் குறி, சில மெய்யெழுத்துக்களின் மேல் இடச்சுற்றில் வளைத்தும் சிலவற்றில் எழுத்தோடு ஒட்டாமலும் இடப்பட்டதை வல்லம், திருக்கழுக்குன்றம் கல்வெட்டுக்களில் காணலாம் (படம் 12-18). இறுதியாக இவை எழுத்தின் இடப்பக்கத்திலிருந்து

வலப்பக்கமாக வளைத்து இடப்பட்டுள்ளன. தொடக்க நிலையில் க (படம் 12), ச (படம் 14), த (படம் 13), ந மற்றும் ர ஆகியவற்றின் குத்துக்கோட்டில் சிறிய படுக்கைக் கோடு இடப்பட்டது. இப்படுக்கைக் கோடு சிறிது சிறிதாக இடப்பக்கத்தில் கீழ்நோக்கி வளைத்து எழுதப்பட்டுள்ளது. இதைத்தவிர செங்குத்துக் கோட்டின் நடுப் படுக்கைக் கோட்டின் இரு முனைப் பகுதிகளும் கீழ்நோக்கி வளைந்திருப்பதைக் காணலாம். குத்துக்கோட்டின் கீழ்ப்பகுதி இடப்பக்கமாக மேல்நோக்கி வளைந்து இன்றுள்ள நிலைக்கு வித்திடுகின்றது. த, ந, ழ, ற முதலிய எழுத்துக்களில் கீழ்நோக்கி இழுக்கப்படும் கோடு கூரம் செப்பேட்டுக்காலம் வரை சிறிதாகவும் பின்னர் இவை இடது பக்கம் நீட்டியும் எழுதப்பட்டுள்ளது. வல்லம் கல்வெட்டில் காணப்படுகின்ற வ எழுத்து மேல் முனையில் குறுகிக் காணப்பட்டாலும் பிற்காலத்தில் நன்கு இடைவெளி விட்டு பின்னர் இடது பக்க மேல் முனையில் சுழித்து எழுதப்பட்டன (படம் 17). ண, ன, ல, ள எழுத்துக்கள் ஆரம்ப நிலையில் வளைவுகளுடனே எழுதப்பட்டு பின்னர் சுழித்து எழுதப்பட்டது. இவை தமிழ் எழுத்துக்கள் வலப்புறச் சுற்று முறையில் எழுதப்படுவதால் பெறும் வளர்ச்சியைக் காட்டுகிறது.

முடிவுரை

மேற்கண்ட ஆய்விலிருந்து தமிழகத்தின் வடபகுதிகளாகிய வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, செங்கல்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பல்லவ மன்னர்களின் போற்றுதலினால் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் தமிழ் வரிவடிவக் கல்வெட்டுக்கள் மிகுதியாகக் கிடைக்கப் பெறுகின்றன என்பது தெளிவாகிறது. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவ மன்னர்களின் கல்வெட்டுக்களில் வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கிடைக்கப் பெறாமையாலும், தொண்டை மண்டலத்தின் மற்ற சுற்று வட்டாரப் பகுதியில் பழைய வட்டெழுத்துக் கல்வெட்டுக்கள் கிடைப்பதாலும், வட்டெழுத்து பிராமியிலிருந்து வளர்ந்த தொன்மையான உள்நாட்டு வரிவடிவம் என்றும், அவற்றைக் குடிமக்களே போற்றி வளர்த்தனர் என்றும் கருதலாம். இவ்வகை வட்டெழுத்துக்களின் மேல் கிரந்த எழுத்துக்கள் கொண்ட தாக்கத்தின் காரணமாகப் புதிய தமிழ் வரிவடிவ எழுத்துக்கள் உருவாயின. இது ஒரே காலகட்டத்தில் தமிழ் மொழியை எழுத இரு வேறு வரிவடிவங்களான வட்டெழுத்தும் தமிழும் இணையாக உபயோகப்படுத்த வழிகோலியது.

PALAEOGRAPHICAL STUDY OF SCRIPTS IN TAMIL NADU

FROM A.D. 500 To 985

Introduction

In Tamil Nadu, old inscriptions are found in three types of scripts, namely Vatteluttu, Tamil and Grantha. The Vatteluttu and Tamil scripts were used to write the Tamil language and the Grantha script was used to write Sanskrit. For the period prior to A.D. 500 a number of inscriptions is available all over Tamil Nadu dated from c. 3rd century B.C. to 5th century A.D.[1] These inscriptions are, however, concentrated in Madurai, Ramanathapuram and Tirunelveli districts. During this time bracket we do not find a significant evolution in the (Brahmi) scripts. From about the 5th century the scripts show a fair amount of evolution and the branched-out post-Brahmi scripts, viz., Vatteluttu, Grantha and Tamil are seen in different parts of Tamil Nadu. Of these scripts, only for the Vatteluttu the evolution can be traced out right from the beginning. The other two scripts, Grantha and Tamil, became visible only from the 7th century A.D.

These inscriptions were engraved on stone and copper plates recording information mostly about constructions of temples, donations to temples, etc. The commemoration of the heroes who fell dead in defending the enemies, cattle raids, etc. is the subject matter of a number of inscriptions during the 7th to 9th centuries. The estampages of these inscriptions in various journals like **Epigraphia Indica, South Indian Inscriptions, Annual Report on Indian Epigraphiy**, etc. are the main sources to study the evolution of the scripts.

G. Buhler (1896)[2] and G.H. Ojha (1918)[3] are the fore-runners of the Indian Palaeographical research. After them A.H. Dani's work (1963)[4] on this field introduced a new approach in the study of Palaeography. Though the above works deal mainly with the study of the Indian Palaeography as a whole, some attention has also been given to South Indian Palaeography. A.C Burnell (1974),[5] T.A. Gopinatha Rao (1910),[6] T.N. Subramaniam (1957),[7] C. Sivaramamurthy (1966)[8] and T.V. Mahalingam (1967) [9] have paid a special attention to South India, particularly to Tamil Nadu. In recent years K.G. Krishnan,[10] and Iravatham Mahadevan [11] and a few other scholars [12] have published some valuable articles on this problem.

THE DATA

In the past two decades new inscriptions have been discovered like those from Pulankurichi (Thevar Tirumaganar district)[13] and the hero-stone inscriptions of Dharmapuri [14] and North Arcot [15] districts. These inscriptions fill up the gap between the time of the Brahmi script and the 7th century. These also help to fix up some inscriptions like Arachalur, Thirunatharkunru and other undated inscriptions in a chronological frame. Now we can understand to a large extent the transitional stage and the mutual influence on each other among the Vatteluttu, Grantha and Tamil scripts and their evolution up to A.D. 985. The present work is an attempt to study these details with the help of a number of plates prepared specifically for this purpose using the facsimiles of the inscriptions dated from c. A.D. 500 to 985.

To start with, the distribution of all the available inscriptions according to time and space was calculated with the help of **A topographical List of Inscriptions in Tamil Nadu and Kerala States** by T.V. Mahalingam.[16] A data-base was created using Computer for this purpose. The following Table No.1 shows the chronological distribution of the inscriptions in different scripts up to 985.

TABLE - I

Total Number of Inscriptions reported:

DATE	Vatteluttu	Tamil	Grantha
500–600	25	–	2
601–700	54	8	40
701–800	49	41	30
801–985	236	1762	52

From the above table it is clear that through the 8th century the number of the Vatteluttu inscriptions is the highest. Up to 600 no Tamil inscriptions are found and there are only two Grantha inscriptions. Only in the 7th century there are a few Tamil inscriptions, but there is a considerable number of Grantha inscriptions (mostly label inscriptions). In the 8th century and thereafter the Tamil inscriptions show a remarkable increase. Table-2 gives information relating to the spatial distribution of the scripts in each district.

TABLE—II

Chronological and Spatial Distribution of Inscriptions in Tamil Nadu

	500–600 A.D.				601–700 A.D.			701–800 A.D.			801–985 A.D.		
District	B	V	T	G	V	T	G	V	T	G	V	T	G
Tiruchirappalli	4	—	—	1	—	4	7	—	2	1	—	338	3
Thanjavur	—	—	—	—	—	—	—	—	5	1	—	607	4
South Arcot	—	—	—	—	—	—	6	—	6	2	1	251	2
Selam	—	—	—	—	—	—	—	—	—	9	—	17	—
Chengalput	—	—	—	—	—	4	24	—	13	10	—	256	12
Dharmapuri	—	21	—	—	16	—	—	23	1	—	18	5	2
North Arcot	1	3		1	34	—	3	12	12	3	2	259	16
Coimbatore	3	—	—	—	—	—	—	—	—	—	4	4	—
Madurai	24	—	—	—		—	—	4	1	4	22	3	5
Tirunelveli	1	—	—	—	3	—	—	7	—	—	146	18	1
Ramanatha puram	1	1	—	—	1	—	—	1	—	—	19	1	3
Kanyakumari	—	—	—	—	—	—	—	2	1	—	24	3	4
Total	34	25	—	2	54	8	40	49	41	30	236	1762	52

'B' = *Brahmi Script* 'T' = *Tamil Script*

'V' = *Vatteluttu Script* 'G' = *Grantha Script*

SOCIO-CULTURAL AND GEOGRAPHICAL FACTORS FOR THE EVOLUTION OF THE SCRIPTS

The origin of Brahmi, the earliest script found in India and the mother of most scripts in present-day India, still remains a question among the scholars. Anyhow, the Vatteluttu, Tamil and Grantha scripts are derived from Brahmi. There are, however, differences between North Indian Brahmi and the Brahmi of Tamil Nadu. The aspirates, sibilants and voiced consonants of northern Brahmi are not seen in Tamil Brahmi[17] and the new characters 'l̠', 'ḷ' 'r̠' and 'n̠' are seen only in Tamil. There is no significant evolution in the Brahmi script from the 3rd century B.C. to the 5th century A.D.

There are many prevailing theories regarding the origin of the Vatteluttu:

1. Independent origin[18]
2. Cursive form of Tamil script[19]
3. Tamil-Brahmi origin[20]

Now there are available many crucial Vatteluttu inscriptions which help to find out the origin and to trace out the evolution of the Vatteluttu script from Brahmi. From the inscriptions found at Arachalur, Periyar district (c. 4th century A.D.),[21] Pulankurichi, Ramanathapuram district (c. 500- 550 A.D.)[22] Irulappatti, Dharmapuri district (c.500-550 A.D)[23] and other hero-stone inscriptions of Dharmapuri and North Arcot districts of early Pallava times, the evolution may be studied (see Plates 1 to 10 and 26 to 36).

The earliest Tamil inscriptions so far discovered with a regular script is supposed to be the Pallankoil copper plate record of the Pallava King Simhavarman (c. 550 A.D.).[24] After this, the inscriptions in Tamil script are found at Vallam (610-630 A.D.),[25] Tirukkalukkunram (c.650 A.D)[26], Chengalput district and Kuram Copper Plates (689-691 A.D)[27] in the same district.

But the script of the Pallankoil copper plates is more developed than that of the other three archaic Tamil inscriptions. When compared to the Vatteluttu script until 550 the evolution of the Tamil scripts as represented in those plates looks very pronounced, implying a considerable output of the inscriptions of Tamil script. But the fact is that up to 600 no other Tamil inscriptions is found. Palaeographically the Pallankoil plates resemble the Pattathalmangalam plates dated to the 8th century and hence assignble

to the 8th century only. The symbols for the vocalic consonants of 'ā', 'ē' and 'o' in the Kuram plates are written without any gap. But in the Pallankoil plates these are written separately. The letters 'ṇ', 'v' and 'ṉ' are also more developed in these plates than those of the Kuram plates.

The Grantha inscriptions in Tamil Nadu are seen from the beginning of the 7th century A.D., i.e., from the times of the Mahendravarman I (610-630) and they have to be attributed to the advent of the Pallavas in northern Tamil Nadu. It may be noted that the early inscriptions with these three scripts are all available only in northern Tamil Nadu. The reason for the prevalance of two different scripts to write Tamil language and other (Grantha) script to write Sanskrit language and the causes for their proliferation in different areas in different times, have to be attributed to different cultural factors.

Most of the Vatteluttu inscriptions noticed in the districts of Dharmapuri and North Arcot are those of the hero-stones, commemorating the local heroes who died during the cattle raids. The scripts of these hero-stones are archaic and simple (Plates 22 to 28). The four Tamil inscriptions of Chengalput district, on the other hand, record the construction of Hindu temples. Out of these four Tamil Inscriptions, dated up to 700, three record construction of temples and the fourth one (from Thirukkalukkunram) records the land donation to a temple. Four other Tamil inscriptions from Tiruchirappalli giving some personal names are very short containing only a few characters . In the following centuries also we see the such short Tamil inscriptions over a wider area (Plates 37 and 38).

Up to 700, the Grantha script was somewhat prominent when compared to the Tamil script for writing the native language only one fifth are found (Table-II). So it may be suggested that the origin of the Tamil script was during the beginning of the 7th century. From the fact that the Grantha and Tamil inscriptions are confined to the Pallava area it may be suggested that the Pallavas encouraged these two scripts.

A comparison of the Vatteluttu (Plates 27 to 36) and Tamil (Plates 37 to 51) scripts shows that during the 6th and 7th centuries the symbols for the consonants 'k', 'ṅ', 'c', 'ñ', 'ṭ', 'y', 'r', 'ḻ', 'ḷ' and 'ṟ' are more or less common for both. But the symbols for the vocalic consonants are different. In Tamil script the symbols for 'ṅ', 'ñ', 'ṭ', 'ṇ', 't', 'p', 'y' and 'v' are the same as those in the Grantha script and 'k', 'c' and 'r' slightly differ from each other (Plates 56 to 59). In Grantha the vertical strokes in 'k' and 'r' are

